# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 1/2017** **நாள் : 10/01/2016**

**பெறுநர்**
மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள்
மத்திய அமைப்பின் அனைத்து கிளைச் செயலாளர்கள்
மத்திய அமைப்பின் மாநில செயற்குழு உறுப்பினர்கள்

## அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்கள்

தோழர்களே

வணக்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள் கூட்டம் தலைவர் தோழர் எஸ்.எஸ்.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் 09.01.2017 அன்று திருச்சியில் நடைபெற்றது. தலைவர் தனது உரையில் மத்திய மாநில அரசுகளின் நிலை, உதய் திட்டம் தொடர்பாக தமிழக அரசின் முந்தைய நிலைபாடு, தற்போது முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா மறைவுக்குபின் தமிழக அரசு உதய் திட்டத்தில் கையெழுத்திட்டதின் பின்னணி, உதய்திட்டம் மின் நுகர்வோர்களுக்கும், ஊழியர்களுக்கும் பயன்படாதது என்பதற்கான விளக்கத்தையும், நாம் நடத்திய இயக்கம் டிசம்பர் 22 அதன் வெற்றி முதலியவை பற்றியும் சி.ஐ.டி.யு-வின் மாநிலக்குழு முடிவுகளை பற்றியும் விளக்கி தனது தலைமையுரையில் கூறினார்.

அதன் பின் மாநிலப்பொதுச் செயலாளர் தோழர் எஸ்.இராஜேந்திரன் ஏற்காட்டில் 2016 நவம்பர் 19-20 ஆகிய தேதியில் நடந்த மாநில செயற்குழுவிற்கு பின் நடைபெற்ற பணிகள் குறித்தும், வர்தாபுயல், அதன் சேதத்தை கணக்கில் கொண்டு நாம் எடுத்த நடவடிக்கைகள் நமது ஒப்பந்த ஊழியர்களையும், நிரந்தர ஊழியர்களை ஈடுபடுத்தியது, மாநிலத் தலைவர்கள் வெளி மாவட்ட தோழர்களை சந்தித்தது, அவர்களிடத்தில் ஏற்பட்ட எழுச்சி, உற்சாகம் ஆகியவற்றையும், அவ்வாறு சந்திக்கின்ற ஊழியர்கள் மத்தியில் டிசம்பர் 22 காத்திருப்பு போராட்டம்- கூட்டு முறையீடு சம்மந்தமாக பேசியதையும் குறிப்பிட்டார்.

மேலும் டிசம்பர் - 22 கூட்டுமுறையீடு - காத்திருப்பு போராட்டம் தயாரிப்பு பணிகள், டிசம்பர் -22 -ல் மிகப்பெரிய எழுச்சியை நாம் உருவாக்கியது. இந்த எழுச்சியில் உற்சாகமாக கலந்து கொண்ட நிர்வாகிகள்,

கிளை நிர்வாகிகள் கலந்து கொண்ட தோழர்கள் அத்தனை பேரையும் எவ்வளவு பாராட்டினால் தகும் என்பதை எடுத்துரைத்தார். டிசம்பர் - 22 இயக்கத்தின் இறுதியில் நடைபெற்ற பேச்சுவார்த்தை மினிட்ஸ் பெற்ற விபரம் ஆகியவற்றையும் எடுத்துக் கூறினார். இந்த எழுச்சி தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நம்பிக்கை இதை நாம் ஸ்தாபன படுத்தி உறுப்பினர் சேர்ப்பை அதிகரிக்க வேண்டிய அவசியத்தை பற்றியும் கூறினார்.

தனியார் மின் உற்பத்தி நிலைய ஊழியர்களின் அவலநிலை அவைகளை களைய நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் கூறினார்.

போனஸ் படிவம், சம்மந்தமாகவும் பேசப்பட்டது. டி.ஜே. நினைவக கட்டிட விஸ்தரிப்பு பணிகள், ஓய்வு பெற்றோர் நல அமைப்பு மார்ச் 3-ல் நடத்த உள்ள இயக்கம், தனிநபர் பிரச்சனையில் மாநில மையம் தலையீடு பற்றியும் விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்ட மாநில நிர்வாகிகள் அனைவரும் தங்களுக்கு டிசம்பர் - 22 இயக்கத்தில் கிடைத்த அனுபவங்களையும், வர்தா புயலில் நமது தோழர்களின் பணிகளையும் அவரவர்களுக்கு உரிய பாணியில் உற்சாகமாக விவாதித்தது. நமது ஸ்தாபன கட்டமைப்பை இன்னும் பலப்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும் என்ற நம்பிக்கை மாநில மையத்திற்கு ஏற்பட்டு உள்ளது.

**மாநில நிர்வாகிகளின் விவாதத்திற்கு பின் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.**

- மாநாட்டு முடிவுகள் தொடர்பான பேரவைகளையும் டிசம்பர் - 22 கூட்டுமுறையீடு - காத்திருப்பு போராட்டம் வெற்றி பேரவைகளையும் நடத்தாத கிளைகள் உடனடியாக நடத்தப்பட வேண்டும், மாநில நிர்வாகிகளின் பங்கேற்பை இதில் உத்திரவாதப்படுத்திட வேண்டும்.
- வர்தா புயலில் பணிபுரிந்த மின்வாரிய ஊழியர்களுக்கு கிளை வாரியாக பாராட்டு சான்றிதழ் வழங்குவது, அதற்கு குடும்ப விழாவாக நடத்துவது சங்க வேறுபாடு இல்லாமல் தோழர்களை அழைத்து கௌரவிப்பது வாரிய அதிகாரிகள் சகோதர தொழிற்சங்க தலைவர்களை அழைப்பது...
- நவம்பர் புரட்சி நூற்றாண்டு விழாவையொட்டி, சென்னை, மதுரை, கோவை, திருச்சி, நெல்லை, ஆகிய இடங்களில் கருத்தரங்கம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. கல்வெட்டு திறப்பு நிகழ்ச்சியும் நடத்த கிளைகள் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
- 2016 - உறுப்பினர் சந்தாவை ஜனவரி 31-தேதிக்குள் இறுதிப்படுத்துவது, மாநில நிர்வாகிகள் விடுப்பு எடுத்து கிளைகளில் கவனம் செலுத்துவது
- ‘‘உதய்’’திட்டம் சம்மந்தமாக சிறுபிரசுரம் வெளியிடுவது அதை நுகர்வோர், ஊழியர்கள் மத்தியில் விநியோகிப்பது.
- ஏப்ரல் -4-ல் சி.ஐ.டி.யு-வின் மாநாட்டு முடிவுகள் படி கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெறும் கோட்டை நோக்கி பேரணியில் 5000-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொள்ள திட்டமிடுவது.
- கிளைகளின் கணக்குகள் தயாராக இருக்க வேண்டும் தணிக்கையாளர்கள் கணக்கை தணிக்கை செய்ய வேண்டும். மாநில நிர்வாகிகள் உள்ள கிளையில் இதை உடனடியாக செய்திட வேண்டும்.
- கிளையின் பெயரில் வங்கி கணக்கு துவங்கியிருக்க வேண்டும் போனஸ் ஈவு காசோலையாக கிளைக்கு வழங்கப்படும்.

- கிளைப்பேரவைகள் நடத்தாத கிளைகள் உடனடியாக நடத்தப்பட வேண்டும்.
- போனஸ் பிடித்தம் செய்த விபரத்தை மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்திலிருந்து சென்னைக்கு அனுப்பிய விபரத்தை மாநில மையத்திற்கு தெரிவிக்க வேண்டும்.
- தொழிற்சங்க வகுப்புகள் ஏப்ரல் மாதத்தில் நடத்துவது அதன் மூலம் இரண்டாம் கட்ட தலைவர்களை உருவாக்குவது.
- கிளைகள் சந்தா விபரத்தை அனுப்பும் பொழுது உறுப்பினர்களின் முகவரி, கதவு இலக்கம், தெரு, ஊர், பின்கோடு, முதலியவை தெளிவாக எழுதும் பட்சத்தில் மின்கதிர் அனுப்ப ஏதுவாக இருக்கும் முகவரிகளை தனித்தாளில் டைப் அடித்து அனுப்பினாலும் வசதியாக இருக்கும். (கிளைச் செயலாளர்கள் கவனம் செலுத்த வேண்டும்)
- அயனாவரம் பள்ளி நிதி கிளைகளின் உறுப்பினர்கள் அடிப்படையில் 10% நிர்ணயிக்கப்படுகின்ற தொகையை வசூல் செய்து கொடுப்பது.
- தனியார் மின் உற்பத்தி நிலைய ஊழியர்களின் மாநாடு 2017 பிப்ரவரி இறுதியில் நாகையில் நடத்துவது.
- ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்பால் ஏற்பட்டுள்ள, பணப்புழக்க தட்டுப்பாடு, அதனால் ஏற்பட்டுள்ள பாதகமான விளைவுகளை பாதிக்கப்பட்ட மக்கள், ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் சுயேட்சையான கூட்டான இயக்கத்திற்கு திட்டமிடுவது.

என்பன போன்ற முடிவுகள் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. கிளை நிர்வாகிகள், நிர்வாகிகள் கூட்டத்தை கூட்டி குழுவாக பணியாற்ற திட்டமிட்டு, செயலாற்ற தோழமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்
தோழமையுள்ள

**(எஸ்.ராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்



**நம்முள் உள்ள தொய்வுகளை**
**போகியாய் கொளுத்திவிட்டு**
**சாதி, மதபேதமின்றி,**
**உழைக்கும் உழைப்பாளியின்**
**உயர்வுக்கும் வாழ்வுக்கும், போராடிட**
**சமத்துவ பொங்கல் கொண்டாடும்**
**அன்பு தோழமைகளுக்கும்**
**மின் ஊழியர் மத்திய அமைப்பின்**
**இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

**நாம் நடத்திய போராட்டம், அதையொட்டி நடைபெற்ற பேச்சு வார்த்தையின் தாக்கம், மின்வாரிய சங்கங்களின் பலத்தை பரிசோதிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.**

**இதுவரையில் வாரியம் சேகரித்த விவரங்களில், மத்திய அமைப்பே முதன்மை சங்கமாக முதல் நிலையில் உள்ளதாக வாரியம் தகவல் தெரிவித்துள்ளது - நம்முடைய உழைப்பு மற்றும் போராட்டத்திற்கு கிடைத்த பலன்**

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 02/2017** **நாள் : 13/01/2017**

**பெறுநர்**

மாநில நிர்வாகிகள்
கிளை செயலாளர்கள்

## மத்திய அமைப்பின் கிளை செயலாளர்கள் கூட்டம் 05.02.2017 - சென்னை

அன்பான தோழரே! வணக்கம்

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள் மற்றும் கிளைச் செயலாளர்கள் கூட்டம் **05.02.2017 காலை 10.00 (ஞாயிற்றுக்கிழமை) அன்று தோழர் து. ஜானகிராமன் நினைவகம், சிந்தாதிரிப்பேட்டையில், நடைபெறவுள்ளது. தோழர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் தோழமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

**பொருள்**

1. அஞ்சலி
2. நடைபெற்ற பணிகள்
   (அ) வார்தா புயல் - நமது பணிகள்
   (ஆ) டிசம்பர் -22 கூட்டு மூறையீடு காத்திருப்பு போராட்டம் - பரிசீலனை
3. 2016 - உறுப்பினர் இறுதி படுத்தல்
4. தனியார் மின் உற்பத்தி நிலைய ஊழியர்கள் - மாநாடு
5. இதரவைகள்
   1- நவம்பர் புரட்சி நூற்றாண்டு கருத்தரங்கம்

தோழமையுள்ள

**(எஸ்.ராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்

**குறிப்பு**

1. போனஸ் பிடித்தம் - மத்திய அலுவலகத்திலிருந்து சென்னை அனுப்பிய விபரத்தை சேகரித்து மாநில மையத்திற்கு தர வேண்டும்.
2. கூட்டத்திற்கு வரும் பொழுது 2016 உறுப்பினர் சேர்ப்பை முடித்து ரசீது ஈவுத்தொகையையும் கொண்டு வரவேண்டும்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**

**சுற்றறிக்கை எண் 3/2017** **நாள் : 17/01/2017**

**பெறுநர்**
மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள்
மத்திய அமைப்பின் அனைத்து கிளைச் செயலாளர்கள்
மத்திய அமைப்பின் மாநில செயற்குழு உறுப்பினர்கள்

தோழர்களே

வணக்கம்

2017 ஜனவரி 9-ம் நாள் நடைபெற்ற மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டு முடிவுகளை அமலாக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளோம்.

22.12.2016 அன்று நடைபெற்ற போராட்டத்தின் முன் வைக்கப்பட்ட 9 அம்ச கோரிக்கைகளில் பதிவறை எழுத்தருக்கு பதிவறை உதவியாளராக பதவி உயர்வு, மின்பாதை ஆய்வாளர் பதவி உயர்வுக்கு மஸ்தூர் பணிக்காலத்தை கணக்கில் எடுத்தல், மின்வாரிய ஊழியர்களின் ஊர்மாற்றம், பதவி உயர்வில் திட்ட ஒதுக்கீடு போன்ற கோரிக்கைகளின் மீது சாதகமான உத்தரவு வழங்கப்பட்டு நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது.

உதவி பொறியாளரில் இருந்து உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு வழங்குவதற்காக பதவி உயர்வுக்குழு கூட்டம் நடத்தி பேனல் வெளியிடும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வில் பணி அனுபவ காலத்தை குறைக்க வாரியக்கூட்டத்திற்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வணிக உதவியாளர் கம்பியாளர்களுக்கு சமச்சீரான பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்க சூப்பர் நியூமரரி மின்பாதை ஆய்வாளர் பதவியை அனுமதி பெற வாரியக்கூட்டத்திற்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இக்கோரிக்கையை வாரியக்கூட்டத்திற்கு கொண்டு சென்று விளக்கம் அளிக்க அதிகாரிகளின் குழுக்கூட்டம் நடைபெற்று வருகிறது. அவர்களுக்கு உதவும் வகையில் கூட 27.10.2015 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தை விவரங்களை கவனத்திற்கு கொண்டு வருவதற்காக கடிதம் தயாரிக்கப்பட்டு வாரியத்தலைவர் உள்ளிட்ட வாரியக்குழு உறுப்பினர்களுக்கு கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் மின்வாரியத்தில் கல்வித்தகுதி உடையவர்கள் - கல்வித்தகுதி இல்லாதவர்கள் என்ற வேறுபாட்டை விசிறி விட்டு, கல்வித்தகுதி இல்லாதவர்கள் எவ்வித பதவி உயர்வும் இல்லாத நிலையை உருவாக்கும் வகையில் நச்சு கலந்த துண்டறிக்கை வெளியிட்டு குழப்பத்தை விளைவித்து வருகிறது. நாமும் வேறு வழியின்றி அந்த துண்டறிக்கைக்கு பதிலாக அல்லாமல்கல்வியறிவு குறைந்தவர்களின் சிறப்பு மிக்கப் பணியையும், தொழிற்கல்வி பயின்றவர்கள் மின் வாரியத்தில் வரவேண்டிய தன் அவசியத்தையும் விளக்கி மாநில மையத்திலிருந்து துண்டறிக்கை வெளியிட்டுள்ளோம். இதை முறையாக விநியோகம் செய்து, தொழிலாளர்களின் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்க வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

போராட்டத்திற்கு முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் ஒன்றான பகுதி நேர ஊழியர்கள் பதவிகளை அனுமதித்து காலிப்பணி இடங்களை நிரப்புவது சம்மந்தமாகவும், வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அடுத்த வாரியக் கூட்டத்திற்கு கொண்டு செல்ல உள்ளதாகவும் தெரிய வருகிறது.

மின்வாரிய ஊழியர்களின் ஊதிய உயர்வு கோரிக்கை சம்மந்தமாக பேச்சு வார்த்தை நடத்தப்படும். என்று பேச்சுவார்த்தை குறிப்பில் கொடுத்துள்ளதை வலியுறுத்தி வருகிறோம். அவர்களும் வேலைபளு உயர்வுக்காக அமைக்கப்பட்ட குழுக்களிடமிருந்து அறிக்கைகளைப் பெற்று பேச்சு வார்த்தை நடத்துவதற்கு தயாராகி வருவதாக தெரிய வருகிறது.

இதற்கிடையில் நாம் தயாரித்த ஊதிய உயர்வு கோரிக்கை பட்டியலை மின் துறை அமைச்சரிடம் அளித்து உடனடியாக பேச்சு வார்த்தை நடத்திட வேண்டுமென கேட்டுக்கொள்ள உள்ளோம்.

பேச்சு வார்த்தைக்கு முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் ஒன்றான ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு சமவேலைக்கு சமஊதியம் வழங்கிட வேண்டும் என்று வலியுறுத்தினோம். வாரியமும் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்துள்ளனர். அதன் ஒரு அம்சமாகக்கூட மின் வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்கள் வழக்கு சம்மந்தமாக விவரங்களை திரட்டும் பணியில் வாரியம் ஈடுபட்டு வருகிறது. அதிலே கூட மின் ஊழியர் மத்திய அமைப்பு சார்பாக தொடுத்த மூன்று வழக்குகளின் விவரங்களை எஸ்.எம்.எஸ் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதையும் தக்க விதமாக பயன்படுத்திட கேட்டுக்கொள்கிறோம்.

இதற்கிடையில் 26.10.2016 அன்று உச்சநீதிமன்றம் சமவேலைக்கு சமஊதியம் அளித்திட வேண்டு மென்ற தீர்ப்பினை வழங்கியுள்ளது. அதாவது ஒருநிறுவனத்தில் ஒரு பணியில் ஈடுபடும் ஊழியர்கள், பணிநிரந்தரமாகவோ, ஒப்பந்த தினக்கூலி தொழிலாளியாகவோ பணியாற்றினால் அவர்களுக்கு சமவேலைக்கு சமஊதியம் வழங்கிட வேண்டும் என்ற தீர்ப்பினை அளித்துள்ளது.

உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய போதிலும், அதை நடைமுறைக்கு கொண்டு வருகின்ற அல்லது நிறுவனங்களில் அதை அமலாக்கிட முயற்சிக்கின்ற வகையில் நிறுவனங்களின் தலைமைக்கு ஊழியர்கள் மூலமாக விண்ணப்பம் அளித்து தொடர்ச்சியாக வலியுறுத்திட வேண்டும் என்று மாநில சிஐடியுவும், மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள் கூட்டத்திலும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் ஒப்பந்த தொழிலாளர்கள், அவர்கள் சார்ந்த மின் வட்ட மேற்பார்வை பொறியாளருக்கு வேண்டு கோள் விண்ணப்பம் சமர்பித்து அதன் நகலை வாரியதலைவருக்கும், தலைமைபொறியாளர்/ பணியமைப்பு/ சென்னை - 2 முகவரிக்கு சமர்ப்பித்திட வேண்டும்.

ஒப்பந்த தொழிலாளர்கள் அளிக்க வேண்டிய கோரிக்கை விண்ணப்பதின் நகலை இத்துடன் இணைத்துள்ளோம். இதை தங்கள் மின்வட்டக்கிளைக்கு வேண்டிய அளவு நகல்கள் எடுத்து **ஒப்பந்த தொழிலாளர்களின் பேரவையை** நடத்தி அந்த பேரவையில் பணி செய்யும் ஒப்பந்த தொழிலாளர் மூலம், **விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்புவதற்குண்டான ஏற்பாட்டை செய்திட வேண்டும். இது அவசரமும், அவசியமும் ஆனதாகும்** என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

போராட்ட நிகழ்வுகளை விளக்குவதற்கு பேரவைகள் நடத்த வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளோம். அதை நடத்துவதோடு, **ஒப்பந்த தொழிலாளர்கள் பேரவையை தனியாக நடத்தி** அவர்களை வரச்செய்து விண்ணப்படிவங்களை பூர்த்தி செய்து அனுப்புவதோடு அவர்களை ஸ்தாபனப்படுத்துவதற்குண்டான நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறோம்.

விவசாயிகள், தொழிலாளர் ஒற்றுமையை வலியுறுத்தும் விதமாக ஜனவரி - 19, தியாகிகள் தினத்தை தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்து நிவாரணம் வழங்க, வலியுறுத்துகின்ற விதமாக சிஐடியூ, விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் சங்கங்கள் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்திட வேண்டும் என்று மாநில சிஐடியூ முடிவு எடுத்துள்ளது. அந்த முடிவை அமலாக்கும் விதமாக மாவட்ட சிஐடியூ நடத்துகின்ற கண்டன ஆர்ப்பாடங்களில் மின் வாரிய ஊழியர்கள் பெருந்திரளாகக் கலந்து கொள்ளச் செய்திட வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

மத்திய அரசின் செல்லா நோட்டு அறிவிப்பு அதையொட்டி ஏற்பட்ட பணத்தட்டுப்பாடு, அதனால் சமுதாயத்தின் அனைத்துப்பகுதி மக்களுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள், இவைகளுக்கெதிராக பாதிக்கப்பட்டவர்களை திரட்டி இயக்கம் நடத்துவது என்று சிஐடியூ உள்ளிட்ட பணத்தட்டுப்பாடு எதிர்ப்புக் குழுகீழ்கண்ட இயக்கங்களுக்கு திட்டமிட்டுள்ளது.

* ஜனவரி 29,30,31 ஆகிய மூன்று நாட்கள் பிரச்சார இயக்கத்தை நடத்துவது, காலை, மாலை நேரங்களில் வீதிகள் தோறும் குழுக்களாக மக்களை சந்தித்து துண்டுப்பிரசாரம் விநியோகம் செய்து பிரச்சாரம் கொண்டு செல்வது.

* ஜனவரி 27 அன்று தொழிலகங்கள் முன்பு வாயிற்கூட்டங்கள் நடத்துவது.

* ஜனவரி 31 அன்று மாலை நேரத்தில் மாவட்ட தலை நகரங்களில் மனித சங்கிலி இயக்கத்தைதை நடத்துவது போன்ற போராட்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த போராட்ட நடவடிக்கைகள் அனைத்திலும் மாவட்ட சிஐடியூவோடு தொடர்பு கொண்டு, அதிக எண்ணிக்கையில் நமது ஊழியர் பங்கு பெறவேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

2017 ஆம் ஆண்டு டைரி, காலண்டர், தீக்கதிர் டைரி போன்றவைகள் வட்டங்களின் தேவைக்கேற்ப அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதை உடனடியாக எடுத்து காலதாமதமின்றி விநியோகம் செய்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

2016 ஆம் ஆண்டு முடிந்து 2017 துவக்கத்தில் உள்ளோம். 2015 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கை 29826 - 2016 ஆம் ஆண்டில் இதுவரை மாநில மையத்திற்கு வந்துள்ள எண்ணிக்கை 19500 - இதன் அவசர அவசியத்தை உணர்ந்து உடனடியாக உறுப்பினர் புதுப்பித்தலை முடித்திட வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.ராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்

**அனுப்புநர்**
**..................................**
**ஒப்பந்த ஊழியர்**
**த/பெ** ........................................
............................பிரிவு அலுவலகம்
..................................................கோட்டம்
**பொதுக்கட்டமான வட்டம் சென்னை - 1**

**உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் சமவேலைக்கு சமஊதியம் கேட்பு விண்ணப்பம்**

**பெறுநர்**
**மேற்பார்வை பொறியாளர்**
பொதுக்கட்டுமான வட்டம் சென்னை - 1
தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்,
திரு.வி.க.தொழிற்பேட்டை
கிண்டி.சென்னை - 600 032

ஐயா

**பொருள் :** **திரு..................................... ஒப்பந்த ஊழியர் / ..................... பிரிவு ................... கோட்டம் பொதுக்கட்டமான வட்டம் - உச்சநீதி மன்ற 26.10.2016 தீர்ப்பின் அடிப்படையில் சமவேலைக்கு சம ஊதியம் வழங்கிட வேண்டி விண்ணப்பம் - சமர்பித்தல்**

**பார்வை :** 1. **Civil Appeal No. 2130F2013**

2. **தீர்ப்பு வழங்கிய நாள் 26.10.2016**

தமிழக மின் வாரியத்தில் திரு.................................,ஆகிய நான் ..................................வட்டம்...................../கோட்டம்/................................. பிரிவு அலுவலகத்தில்............ ஆண்டு முதல் ஒப்பந்த தொழிலாளியாக பணியாற்றி வருகிறேன். எனக்கு சமீபத்தில் வழங்கிய உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் சமவேலைக்கு சம ஊதியம் வழங்கிட பரிசீலிக்க வேணுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

ஒப்பந்த தொழிலாளியாகிய நான் மின் வாரியத்தில் புதிய மின் நீட்டிப்பு பணிகள் , பழைய கம்பிகள் மற்றும் சேதமடைந்த மின்சார கம்பங்களை மாற்றுவது, மின் இணைப்பு வழங்குவது துணை மின் நிலையங்கள் பராமரிப்பு, மின் விநியோகப் பெட்டி பராமரித்தல், அனல், புனல், பொதுகட்டுமான வட்ட பணிகளில் என தொடர்ச்சியாக பணியாற்றி வருகின்ற போதிலும் கூட முத்தரப்பு ஒப்பந்தத்தின் மூலம் வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலியைக் கூட எனக்கு முழுமையாக வழங்கப்படவில்லை. இந்நிலையில் மின்வாரிய பணிகளைச் செய்துவிட்டு அங்கு அளிக்கின்ற குறைந்த கூலியில் எனது குடும்பத்தை பராமரிக்க முடியாத நிலையில் உள்ளேன்.

மின் வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளியாக பணியாற்றும் நான், எனது பணியை அங்கீகரித்து வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச கூலியை அளித்திட வேண்டுமென தொடர்ச்சியாக வேண்டுகோள் விண்ணப்பத்தை சமர்ப்பித்து வருகிறேன்.

இதற்கிடையில் பஞ்சாப் மாநிலத்தில் பணிபுரியும் ஊழியர்கள் தொடுத்த வழக்கின் மீது உச்சநீதி மன்றம் தீர்ப்பினை வழங்கியுள்ளது. அந்த தீர்ப்பில் ஒரே நிரந்தர தன்மை வாய்ந்த பணியில் நிரந்தர தொழிலாளியும் தற்காலிக அல்லது ஒப்பந்ததொழிலாளியும் பணியாற்றும் போது ஊதியம் வழங்குவதில் வேறுபாடு இருக்கக்கூடாது. அவர்களையும் கவுரமிக்கவர்களாக நடத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் சமவேலைக்கு சமஊதியம். அது ஒப்பந்த தொழிலாளியாக இருக்கலாம், அல்லது நிரந்தர தொழிலாளியாகவும் இருக்கலாம் அவர்களுக்கு ஒரே விதமான ஊதியத்தை அளித்திட வேண்டுமென்ற தீர்ப்பினை உச்சநீதிமன்றம் அளித்துள்ளது.

உச்சநீதிமன்றம் வழிகாட்டு தீர்ப்பின் அடிப்படையில் மின் வாரியத்தில் தொடர்ச்சியாக நிரந்தர தன்மை வாய்ந்த பணிகளில் பணியாற்றும் எனக்கு சமவேலைக்கு சமஊதியம் வழங்கிட வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு களஉதவியாளருக்கு வழங்கும் சம்பளத்தை எனக்கு தினக்கூலியாக வழங்கிட வேணுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே மேற்பார்வை பொறியாளர்/பொதுக்கட்டுமான வட்டம் சென்னை - 1 அவர்கள் இக்கடிதத்தை நீதிமன்ற தீர்ப்பின் வெளிச்சத்தில் பரிசீலித்து சமவேலைக்கு சமஊதியம் என்ற அடிப்படையில் ஒரு களஉதவியாளருக்கு வழங்கும் ஊதியத்தை தினக்கூலியாக வழங்கிட வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்களின் நம்பிக்கையுள்ள

**நாள்:**

**நகல் :**

தலைவர் / மற்றும் நிர்வாக இயக்குநர்/தமிழ்நாடு மின்சார வாரியம் / சென்னை -2 பணிவுடன் சமர்பிக்கப்படுகிறது.

**நகல் :**

தலைமைப்பொறியாளர் / பணிமைப்பு/தமிழ்நாடு மின்சார வாரியம் / சென்னை -2 பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


பெறுநர்
மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்

அன்பார்ந்த தோழர்களே, வணக்கம்,

நாம் 2017 புத்தாண்டை துவங்கியுள்ளோம். இந்த ஆண்டு நமக்கு சவாலான ஆண்டு பல புதிய தடைகளை தகர்த்து எறிய வேண்டிய ஆண்டாக உள்ளதை கணக்கில் கொண்டு செயலாற்றிட வேண்டும்.

டிசம்பர் 22 அன்று வாரிய தலைமையகம் முன்பு நடைபெற்ற முற்றுகை போராட்டத்திற்கு பிறகு நமது உறுப்பினர்கள் உற்சாகமாக உள்ளனர். அதையொட்டி தமிழகம் முழுவதும் சிறப்பு பேரவைகள் நடந்து வருகின்றது. உங்களது கிளையிலும் பேரவை நடத்தி உறுப்பினர்களை உற்சாகப்படுத்தி சந்தாவை பெறும் நடவடிக்கையை எடுக்க கேட்டுக் கொள்கிறோம்.

2016ம் ஆண்டு சந்தாவை ஒரு வருடம் முடிந்த பிறகும் பெறாதது மிகவும் வருந்தத்தக்கது. உறுப்பினர்களுக்கும் சங்கத்திற்குமான உறவு பாலமாக அமைவது சந்தாவும், இயக்கங்களுமாகும். அந்த சந்தாவை நாம் இன்று வரை பெறாதது அதன் மீது அக்கறை செலுத்தாது மிகவும் கவலைப்பட வேண்டியதாகும்.

மேலும் சமவேலைக்கு சமஊதியம் வழங்க வேண்டும் என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி ஒப்பந்த ஊழியர்கள் அனைவரிடமும் படிவம் பூர்த்தி செய்து வழக்கு தொடரவும் நாம் முடிவு செய்துள்ளோம். நாம் எடுக்கவுள்ள நடவடிக்கை தொடர்பாகவும் ஒப்பந்த ஊழியர் சிறப்பு பேரவை நடத்தி ஒப்பந்த ஊழியர்களிடம் விரைந்து சந்தாவை பெற்றிட நிர்வாகிகள் மற்றும் கிளைச் செயலாளர்கள் சிறப்பு கவனம் செலுத்திட கேட்டுக் கொள்கிறோம்.

உங்களது கிளை 2015, 2016 சந்தா எவ்வளவு மாநில மையத்திற்கு அனுப்பி உள்ளது என்ற விவரம் இத்துடன் கொடுக்கப்பட்டுள்ளது. தோழர்கள் இதை கூர்ந்து கவனித்து 2016 ஆம் ஆண்டு சந்தா புதுப்பித்தலை முடித்திட வேண்டுகிறோம்.

| ஆண்டு | நிரந்தரம் | ஒப்பந்தம் | மொத்தம் |
|---|---|---|---|
| 2015 | | | |
| 2016 | | | |
| வித்தியாசம் | | | |

தோழமையுடன்

M. Venkatesan

**(எம். வெங்கடேசன்)**
பொருளாளர்

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**

**சுற்றறிக்கை எண் 04/2017** **நாள் : 30/01/2017**

**பெறுநர்**

மாநில நிர்வாகிகள்
கிளை செயலாளர்கள்

## மத்திய அமைப்பின் மாநில செயற்குழு கூட்டம்
## 05.02.2017 - சென்னை

அன்பான தோழரே! வணக்கம்

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாநில செயற்குழு கூட்டம் **05.02.2017 காலை 10.00 (ஞாயிற்றுக்கிழமை) அன்று தோழர் து. ஜானகிராமன் நினைவகம், சிந்தாதிரிப்பேட்டையில், நடைபெறவுள்ளது. தோழர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் தோழமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

**பொருள்**

1. அஞ்சலி
2. நடைபெற்ற பணிகள்
   (அ) வார்தா புயல் - நமது பணிகள்
   (ஆ) டிசம்பர் -22 கூட்டு மூறையீடு காத்திருப்பு போராட்டம் - பரிசீலனை
3. 2016 - உறுப்பினர் இறுதி படுத்தல்
4. தனியார் மின் உற்பத்தி நிலைய ஊழியர்கள் - மாநாடு
5. இதரவைகள்
   1- நவம்பர் புரட்சி நூற்றாண்டு கருத்தரங்கம்

தோழமையுள்ள

**(எஸ்.ராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்

**குறிப்பு**

மேற்கண்ட கூட்டம் சுற்றறிக்கை எண் 2ல் தெரிவித்துள்ளவாறு ஏற்கனவே மாநில நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள் பங்கேற்கும் கூட்டமாக சென்னையில் நடத்த திட்டமிடப்பட்டது.

ஆனால் தற்போது சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள தோழர் து.ஜானகிராமன் அவர்களின் நினைவு கட்டிடத்தை மேல்தளம் விரிவாக்கம் செய்து புதியதாக கட்டப்பட்டு முதல் கூட்டம் நடைபெற உள்ளதாலும், தொழிலாளர் சந்திக்கும் அரங்க கூடத்தை மாநில சிஐடியு-வின் பொதுச் செயலாளர் தோழர் ஜி.சுகுமாறன் அவர்கள் அன்றைய தினம் திறந்து வைக்கிறார்.

அந்நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர்களும் பங்கேற்கும் வகையில் ஒரு நாள் மாநில செயற்குழு கூட்டமாக நடத்த திட்டமிட்டுள்ளோம். எனவே அனைவரும் பங்கேற்க வேண்டுகிறோம். செயற்குழு கூட்டம் நடைபெறுவதற்கு முன்பாக காலை சரியாக 10.30 மணிக்கு திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.